# මැතිවරණ කොමිෂන් සභාව
# தேர்தல் ஆணைக்குழு

පොදු කාර්යාලය : 011-2868441, 2868442, 2868443
பொது அலுவலகம்
ෆැක්ස්/தொலைநகல் : 011-2868426

web: www.slelections.gov.lk e-mail: info@slelections.gov.lk

මැතිවරණ කොමිෂන් සභා කාර්යාලය
සරණ මාවත, රාජගිරිය (10107)
தேர்தல்கள் ஆணைக்குழு அலுவலகம்
சரண மாவத்தை, இராஜகிரிய (10107)

| | | |
|---|---|---|
| මගේ අංකය: / எனது இல: EC/EDR/08/2019 | ඔබේ අංකය: / உமது இல: | දිනය: / திகதி : 2019.09.16 |

அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
அரசாங்க அதிபர்கள்,
ஆளுநர்களின் செயலாளர்கள்,
மாகாண சபை அமைச்சுக்களின் செயலாளர்கள்,
நியதிச்சட்ட திணைக்களங்களின் தலைவர்கள்/ வலயக் கல்வித் தலைவர்கள்,
உள்ளூர் அதிகாரசபைகளின் தலைவர்கள்,
மாநகர ஆணையாளர்கள்/ மாநகர செயலாளர்கள்
நகர சபைகள்/ பிரதேச சபைகளின் செயலாளர்கள்,
நியதிச்சட்ட சபைகளதும் அத்தகைய அரசாங்க நிறுவனங்களதும் தலைவர்களும்
அத்தகைய நிறுவனங்களின் பொது முகாமையாளர்களும்,

## சனாதிபதித் தேர்தல் - 2019
## தேர்தல் காலப்பகுதிக்குள் செய்யத்தகாதவை பற்றி தேர்தல் ஆணைக்குழுவினால் வெளியிடப்படவுள்ள பணிப்புரைகள்

தேர்தல் ஆணைக்குழுவினால் 2019.08.20 ஆந் திகதியிட்டு தங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்ட EC/EDR/01/2019 ஆம் இலக்கமும், EC/EDR/08/2019 ஆம் இலக்கமும் கொண்ட பொதுமக்களின் பணத்தை பாரியளவில் செலவிட்டு விளம்பர பிரசாரங்களில் ஈடுபடுதலும் சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல் செயன்முறையொன்றுக்கு அதன்மூலம் ஏற்படுகின்ற தாக்கமும், அரசியல் பிரசார நடவடிக்கைகளுக்கு அரச ஊழியர்களையும் அரச வாகனங்களையும் வேறு சாதனங்களையும் ஈடுபடுத்திக் கொள்ளலும் என்ற தலைப்புகளிலான கடிதங்களுக்கு மேலதிகமாக.

02. சனாதிபதித் தேர்தலின்போது வேட்புமனு கோருவதற்கான அறிவித்தல் இன்றிலிருந்து 14 நாட்களுக்குள் தேர்தல் ஆணைக்குழுவினால் வெளியிடப்படவுள்ளதோடு அரச ஆதனங்களைக் கையாள்வதைத் தடுக்கும் பணிப்புரைகளும் அதனோடிணைந்ததாக வெளியிடப்படும்.

03. நியதிச்சட்ட தேர்தல் காலவரையறைக்கு முன்னரும் கட்சிகளை/வேட்பாளர்களை ஊக்கப்படுத்துவதற்கு அன்றேல் பங்கம் ஏற்படுத்துவதற்கு காரணமாக அமையக்கூடிய சட்டமுரணான கருமங்களில் அரசாங்க அலுவலர்கள் ஈடுபடலாகாது என்பதை எமது இதற்கு முந்திய கடிதங்களில் சுட்டிக் காட்டினோம்.

04. 2018.02.10 ஆந் திகதி நடைபெற்ற உள்ளூர் அதிகாரசபைத் தேர்தல் தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட "தேர்தல் காலப்பகுதிக்குள் அரசாங்கத்திற்கு அல்லது , பகிரங்க கூட்டுத்தாபனங்களுக்குச் சொந்தமான ஏதேனும் அசையும் அல்லது அசையா ஆதனத்தை கட்சிகள், குழுக்கள், வேட்பாளர்களை ஊக்கப்படுத்துகின்ற இன்றேல் தடுக்கின்ற நோக்கத்திற்காக அல்லது சுதந்திரமானதும் நீதியானதுமான ஒரு தேர்தலை நடாத்தும் பணிக்கு தடங்கல் ஏற்படுத்தத்தக்கதாக ஈடுபடுத்துவதை தடைசெய்வதற்கான பணிப்புக்கள்" என்ற தலைப்புடனான 2048/2 ஆம் இலக்க, 2017.12.04 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலின் பிரதியொன்றை இத்துடன் அனுப்புகின்றேன்.

05. சனாதிபதித் தேர்தல் தொடர்பிலும் இவ்வாறான வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலொன்று வெளியிடப்படும் என்பதுடன் அதிலும் இதற்கு நிகரான விடயங்களே குறிப்பிடப்பட்டிருக்குமாதலால், இவ்வறிவித்தலை நன்கு வாசித்துப் பார்க்குமாறும் அவ்வாறான பணிப்புரைகள் அன்றேல் கட்டளைகள், சனாதிபதித் தேர்தலின் வேட்புமனுக் கோரும் திகதியிலிருந்து செயல்வலுப்பெறும் என்றும் கருதி இப்பணிப்புரைகளுக்கு அமைவாக செயலாற்றுமாறு தேர்தல் ஆணைக்குழு சார்பாக இத்தால் தங்களுக்கு அறிவிக்கப்படுகின்றது.

06. இது தொடர்பாக தங்கள் உதவு அலுவலர்களையும் ஏற்புடையவாறு அமைச்சர்களின் பணியாட்டொகுதியினரையும் ஆளுநர்களையும் அறிவுறுத்துவதற்கு தயவுசெய்து நடவடிக்கை எடுக்கவும்.

07. எதிர்வரும் சனாதிபதித் தேர்தலை சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலொன்றாக நடாத்துவதற்கு தங்களிடமிருந்து கிடைக்கும் ஒத்துழைப்பை பெரிதும் போற்றுகின்றேன் என்பதையும் மேலும் அறிவிக்க விரும்புகின்றேன்.

மஹிந்த தேசப்பிரிய
தவிசாளர் - தேர்தல் ஆணைக்குழு
(தேர்தல் ஆணைக்குழு சார்பாக)

பிரதிகள்:
அனைத்து தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கும்
தேர்தல் ஆணைக்குழுவின் பதவிநிலை அலுவலர்களுக்கும் - தகவலுக்கும் உரிய நடவடிக்கை மேற்கொள்வதற்கும்.